# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE**

**Girraween Public School, Bando Road, Girraween, NSW 2145**


## பேச்சும் வாய்மொழித் தொடர்பாற்றலும் - போட்டிகளுக்கான விதிமுறைகளும் வழிகாட்டல்களும் (2018)

## ஆரம்பப்பள்ளி - ஆண்டு 9 (Non HSC)

## பேச்சும் வாய்மொழித் தொடர்பாற்றலும் - போட்டி விதிமுறைகள்

மாணவர்களின் தமிழில் உரையாடும் திறனை ஊக்குவிக்கும் முகமாக பேச்சுப் போட்டியுடன் வாய்மொழித் தொடர்பாடல் போட்டி இணைக்கப்படுள்ளது. இப் போட்டிகளுக்கான புள்ளிகள் வழங்கும் முறை பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. இப் போட்டிகளில் மாணவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்பட்டு அதன்படி அழைக்கப்படுவார்கள். பேச்சுப் போட்டி முடிவடைந்தவுடன் மாணவர்களுக்கான வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி இடம் பெறும்.

## பேச்சுப் போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம் பேசுவதற்காகக் கொடுக்கப்படும்.
2. மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பேச்சுப் போட்டியில் பேசும்பொழுது குறிப்பிடக்கூடாது.
3. இலக்கம் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவர் நடுவர்கள் முன்னிலையில் தமக்குரிய விடயத்தைப் பேசுதல் வேண்டும்.
4. பேச்சுப் போட்டியில் கொடுக்கப்பட்ட விடயங்களுக்கு (அவை வணக்கம் உட்பட) மேலாக எதையும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளக் கூடாது
5. பேசும்பொழுது தடங்கல் ஏற்பட்டால் உதவி செய்யப்படும். ஆனால் இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
6. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்குமுன் பாடசாலைக்கு சமுகம் அளிக்கவேண்டும்.

## வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் கேட்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கு முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் மாணவர்களின் தமிழில் உரையடும் (பேச்சுத் தமிழ்) திறன் மதிப்பிடப்படும் .
4. மாணவர்களின் தமிழில் உரையாடும் திறனை மதிப்பிடுவதற்கான பொதுவான வினாக்கள் கேட்கப்படும். ஆண்டு 5ம் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கும் பேச்சுப் போட்டியில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்து 3 கேள்விகள் கேட்கப்படும்.
5. மாணவர்களின் தமிழ்ச் சொற் பயன்பாடு, தமிழ் மொழியை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன், கூச்சமின்றி கதைக்கும் தன்மை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.
6. வகுப்பு ஆசிரியர்கள் பாடசாலை வரவு, வகுப்பில் தமிழில் கதைத்தல் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்குவார்கள்.

## ஆரம்பப்பள்ளி - ஆண்டு 9 (Non HSC)

__பாடசாலை வரவு:__ நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முன்பு உள்ள பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

__வகுப்பில் தமிழில் கதைத்தல்:__ இதற்கு ஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். மாணவர் வகுப்பு நேரங்களில் வகுப்பறையில் சக மாணவர்களுடனும் ஆசிரியருடனும் தமிழில் உரையாடியதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

போட்டிகளுக்கான மதிப்பீட்டுப் புள்ளிகளின் விபரம்:

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆரம்பப்பள்ளி | ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 | ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 9 (Non HSC) |
|---|---|---|---|
| பாடசாலை வரவு | **10 புள்ளிகள்** | **10 புள்ளிகள்** | **10 புள்ளிகள்** |
| பேச்சுப் போட்டிக்கான நடுவர்களின் மதிப்பீடு | **70 புள்ளிகள்** | **60 புள்ளிகள்** | **50 புள்ளிகள்** |
| மேடை மரபு | 5 புள்ளிகள் | 5 புள்ளிகள் | 5 புள்ளிகள் |
| தெளிவான, சரியான உச்சரிப்பு | 15 புள்ளிகள் | 15 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| பொருள் விளங்கச் சுவைபடப் பேசுதல் | 15 புள்ளிகள் | 15 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| பிழை விடாது பேசுதல் | 35 புள்ளிகள் | 25 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| வாய்மொழித் தொடர்பாற்றலுக்கான மதிப்பீடு | **20 புள்ளிகள்** | **30 புள்ளிகள்** | **40 புள்ளிகள்** |
| வகுப்பில் தமிழில் கதைத்தல் | 10 புள்ளிகள் | 10 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| போட்டி நாளன்று நடுவர்களின் மதிப்பீடு | 10 புள்ளிகள் | 20 புள்ளிகள் | 25 புள்ளிகள் |